ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

ஒரு ஜன்மாவில் செய்யப்படும் கர்மாக்களின் பலன்கள் அதே ஜன்மாவில் அனுபவிக்கப்பட்டுவிடுமென்பதில்லை. ஏனெனில் ஒரு ஜன்மாவில் எண்ணிலடங்காக் கர்மங்கள் செய்யப்படுகின்றன. அவைகளுள் நல்ல கர்மங்களும் பலவிருக்கின்றன. கெட்ட கர்மங்களும் பலவிருககின்றன. ஒரு நல்ல கர்மாவின் பயனானாலும் சரி, கெட்ட கர்மாவின் பயனானாலும் சரி, அது ஒரே ஜன்மத்தில அனுபவித்துவிட முடியாதென்று சாஸ்திரம் கூறுகின்றது. உதாரணமாக ஒரு அசுவமேதயாகத்தின் பயன் அனேக ஜன்மங்களில் அனுபவிக்கப்படவேண்டுமாம். ஒரு மஹாபாதகத்தின் கெட்ட பயனும் பல பிறவிகளெடுத்து அனுபவித்துத் துலைக்கவேண்டுமாம். அத்தகைய நல்ல கர்மங்களும் கெட்ட கர்மங்களும் ஒரே ஜன்மத்தில் பல செய்யப்படும்பொழுது அவைகளின் பயன் யாவும் அதே ஜன்மத்தில் அனுபவித்துவிடலாமென்று எப்படிச் சொல்லமுடியும்? ஆகவே ஏதோ ஒரு ஜன்மத்தில் செய்த கர்மத்தின் பயன் ஏதோ ஒரு ஜன்மத்தில் அனுபவிக்கவேண்டியதாய் வரும். ஒரு கர்மபலனை அனுபவித்துக்கொண்டிருக்கும் பிறவி மானிடப்பிறவியானால் அதில் வேறு பல கர்மங்கள் செய்யப்படுகின்றன. அனாதிஸம்ஸாரத்தில் பிராணி பல ஜன்மங்களுள் எண்ணிறந்த மானிடப்பிறவிகளையடைகிறான். அவைகளில் செய்யப்படும் நல்ல கர்மங்களும் கெட்ட கர்மங்களும் குவியல்குவியலாய்ச் சேருகின்றன. இவைகள்தான் சாஸ்திரத்தில் ஸஞ்சிதகர்மங்களெனப்படுகின்றன. ஒரு மானிடப்பிறவியில் ஒருவன் ஏதோ ஒரு கர்மத்தின் பயனை அனுபவிக்கும்பொழுது அவனுக்கு பராபேக்ஷையில்லையென்று சொல்லமுடியாது. பிரத்தியக்ஷமாய் ஒரு மனிதன் தன் வாழ்நாட்களில் போஜனம் முதலியகாரியங்களை ஸாதித்துக்கொள்ளவேண்டியதற்காக அவனுக்குள்ள பராபேக்ஷையைக் காண்கிறோமல்லவா? அவனது கர்மப்பயனையனுபவிக்கையில் பராபேக்ஷையெதற்காக வேண்டுமெனக் கூறமுடியாது. நல்ல உயர்ந்த படிப்பைப்படித்து பரீக்ஷையிலும் தேறியிருப்பவன் ஜீவனோபாயமான வேலையடைவதற்கு எவ்வளவு சிபார்சுக்கடிதம் கொண்டு எவவளவு பேர்களைப் பார்க்கிறான், பாருங்கள். ஆகவே கர்மாவின பயனையனுபவிப்பதென்றால் அனேகர்மூலமாகத்தான் அனுபவிக்கவேண்டியதாகின்றதேயன்றி ஒருவனுடைய அபேக்ஷையுமில்லாமல் ஆகிறதில்லையென்பது அனுபவஸித்தமன்றோ? ஒருவனிடம் வேண்டிக்கொண்டு கார்யம் கைகூடுவது போல்வேண்டிககொள்ளாமலிருக்கும்பொழுதே வலுவிலேவந்து ஒருவன் ஒரு பயனைக் கொடுக்கிறான். அது அவனது பூர்வஜன்மத்துப்புத்திரன் செய்த சிராத்தகர்மத்தாலேற்பட்ட பயனென்று கருதவேண்டுமென்று சாஸ்திரம் போதிக்கின்றது, லோகாந்தரங்களிலும் இதுபோலவேதான் சிராத்தத்தின் பயன் பிதிருக்களையடைகின்றதென்றுசிராத்தகல்பத்தின் இரஹஸ்யமாம். ஆகவே யாவருமதைச் செய்து பிதிருக்களின் பிரஸாதத்தைப் பெறுவாராக.

சுபம்!

பத்திராதிபர்.

உ

# ஆர்யதர்மம்.

பிரமோத-௵ ஆடி-மீ ௨௩௨

## லோகாந்தரம்.

(297-வது பக்கத்தொடர்ச்சி.)

முன்ஜன்மங்களில் மூட்டைமூட்டையாய்ச் சேர்ந்த கர்மங்களின் பயன்களை ஒரே காலத்தில் அனுபவித்துவிடமுடியாதாகையால் வரிசையாகத்தான் அனுபவிக்கவேண்டும். ஆகவே அவைகளை வரிசைப்படுத்தி அததற்குத்தக்கவாறு பயனையளிக்க ஸர்வக்ஞனை பரமேசுவரன்தான்சக்தியுள்ளவனென்று சாஸ்திரங்களின் கூற்று. அதில் சுபகர்மங்களின் பயனை அனுபவிக்க எல்லோரும் பிரியப்படுவார்கள். அசுபகர்மங்களின் பயன் துக்கமானதுபற்றி அதை அனுபவிக்க எவருக்கும் பிரியமிருக்காதாயினும் அது அனுபவித்தே தீர்க்கவேண்டியதாகும். அந்தக் கஷ்டத்தையனுபவிக்கப் பிரியப்படாவிடில் அந்த கர்மங்களைப் பரிஹரிக்க உபாயத்தைத் தேடவேண்டும். அதில் பாபகர்மங்களைப்பரிஹரிக்க பிராயச்சித்தமும் புண்ணியகர்மங்களும் காரணமாம். புண்ணியமோ, பாபமோ ஸகலகர்மங்களையும் நசிப்பிக்க ஞானமொன்றே காரணமாம். இவ்விரண்டு பரிஹாரோபாயங்களையனுஷ்டிக்காவிடில் அவைகளையனுபவித்தே தீரவேண்டும். பாபகர்மங்களின் பயன் ரௌரவாதிநரகானுபவமும், ஸ்தாவர ஜன்மமும் பசு, பக்ஷி முதலிய திர்யக்பிராணிகளின் பிறவியும் ஆகும். மானிடப் பிறவியிலும் தீராததாரித்திரியத்தையனுபவிப்பதும் மீளாப்பிணிகளால் வருந்துவதும் பாபப்பயனும். இதைப்பற்றித்தான் சாஸ்திரங்களில்

" जन्मान्तरकृतं पापं व्याधिरूपेण बाधते "

"ஜன்மாந்தரங்களில் செய்யப்பட்ட பாபம் வியாதிரூபமாய் பாதிக்கும்" என்பதாகக் கூறப்படுகின்றது. வியாதி வந்துவிட்டால் வைத்தியம் செய்துவிட்டால் போதுமென்று நினைப்பது சரியல்ல.

வியாபகனுன் வைத்தியன் மருந்துகொடுத்தும் தீராத நோயாளி கள்காணப்படுகிறார்களல்லவா? ஆகவே அந்தக்கர்மவியாதிகளுக்கு மருந்துமாத்திரம் போதாது. ஆனால் பின்னும் சில ஸாதனங்கள் வேண்டுமெனத் தெரிகிறது. அதைப்பற்றியே நமது சாஸ்திரம்—

“ तच्छान्तिरौषधैर्दानैर्जपहोमसुरार्चनैः ”

“அந்த ரோகங்களின் சாந்தி ஔஷதங்களாலும் அந்தந்த வியாதி நிவர்த்திக்காக கர்மவிபாகக்கிரந்தங்களில் நிரூபிக்கப் படும் பிரதிமாதானம் முதலிய தானங்களாலும், மந்திரஜபங் களாலும், ஹோமங்களாலும், தேவதாராதனங்களாலும் ஏற் படுகின்றது” என்பதாகப் போதிக்கிறது.

இவ்விதமாகக் கர்மவிபாகப் பிராயச்சித்தத்தை அனுஷ்டித்தவர் கள் அஸாத்திய ரோகங்களிலிருந்தும் விடுபட்டு சுகப்படுவதாக அனுபவத்தில் காணப்படுவதிலிருந்து ஜன்மாந்தரமுண்டென்று தீர்மானமாகத் தெரிகிறது. அன்றியும் புத்திரப்பிரதிபந்தகங் களான பாபங்களால் புத்திரபாக்கியம் தடைப்படும்பொழுது அதற்குள்ள பரிஹாரங்களைச் செய்தவுடன் அந்தப் பிரதிபந்தகங் கள் விலகிப் புத்திரனையடைந்து அந்த ஸந்தோஷத்தையனுபவிப் பதைப் பார்ப்பதிலிருந்தும் மறுபிறப்பு ஸித்திக்கிறது. இவ்விஷ யங்களை போதிக்கும் சாஸ்திரங்களுக்குப் பிராமாண்யமும் நிலைக் கின்றது. ஆகவே கர்மவிபாகசாஸ்திரம்போல் ஸ்வர்க்காதி லோகாந்தரங்களையும் அவைகளுக்கு ஸாதனங்களாகிய யக்ஞாதி கார்யங்களையும் போதிக்கும் வேதம் பிரமாணமென்பது யுக்திசாலி களான புத்திசாலிகளுக்குப் புலப்படாமல் போகாது. வியாதி நிவர்த்திக்கு ஸாதனங்களையுபதேசிப்பதுபோல தாரித்திரியநிவர்த் திக்குள்ள ஸாதனங்களையும் சாஸ்திரம் விதிக்கின்றது. அதை சரி வர அனுஷ்டித்தால் அந்த தாரித்ரியதோஷம் விலகும். இது கர்ம விபாகக்கிரந்தங்களில் வியக்தமாயுள்ளது. ஆகவே தரித்திரநாரா யணனுக்காகப் பாடுபடுகிறவர்கள் இந்த சாஸ்திரத்தையும் கொஞ் சம் கெவனித்து அதுவும் பிரமாணந்தானென்று நம்பி, அதிற் கூறப்படும் ஸாதனங்களையும் சிரத்தையோடு செய்வார்களானால் தரித்திரநாராயணனுடைய வறுமையும்விலகிவிடும். இந்த திருஷ்ட பலானுபவத்தால் வேதப்பிராமாண்யத்தைநம்பி ஜன்மாந்தரத்தை யும், லோகாந்தரத்தையும் நம்பவேண்டியதாகவே ஆகும். லோகாந் தரத்தை நம்பிவிட்டால் அதன் பிராப்திக்கு ஸாதனங்களான

ஸநாதனதர்மங்கள் பெரும்பாலும் நடைபெறும். அதிலிருந்து நல்ல மழை பொழியும். அதனால் நாடெங்கும் சுபிக்ஷமோங்கும். அதனால் ஸர்வப்பிராணிகளும் ஸுகமாய் வாழ்வார்கள். தேவர்களும் திருப்தியடைவார்கள், ஒரு குறைவுமில்லாமல் நம் பாரத நாடு செழிக்கும். ஆகையால் ஸர்வஜனங்கள் சாஸ்திரத்திலும், சாஸ்திரத்தால் ஸித்திக்கும் லோகாந்தரம் முதலிய விஷயங்களிலும் அவநம்பிக்கையையொழித்து யாராகிலும் உலகம் கெட்டுப்போக வழி தேடமாட்டார்களென்றதில் தங்களையே திருஷ்டாந்தமாகக்கொண்டு பிரமாணக்கிரந்தங்களை நம்பி வர்ணாசிரமதர்மத்தைச் சரிவர அனுஷ்டித்து இஹபரங்களில் ஸகலசிரேயஸ்ஸையும் அடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

# கும்பகோணம் புதியவிவாஹமுறை.

இந்நகரில் சோலையப்பமுதலியார்தெருவில் எட்டாந்திருநாள் படித்துறைசமீபம் கோயில்கொண்டெழுந்தருளியுள்ள ஸ்ரீவிசாலாக்ஷிஸமேத ஸ்ரீ விசுவநாதஸ்வாமி கோவிலில் உப்பிலியப்பன் சன்னிதியில் நடைபெறுவதுபோல சிலவிவாகங்களும் உபநயனங்களும் இவ்வாண்டு நடைபெற்றதாகத் தெரிகிறது. உப்பிலியப்பன்ஸன்னிதியில் நடைபெறும் ஒருநாள் கல்யாணமே சரியானதாகாது. சாஸ்திரவிரோதமானது என்று உறையாடும் இக்காலத்தில் சாஸ்திரமறிந்த விப்பிரர்கள் வாழும் சோலையப்பமுதலியார் தெருவிலுள்ள ஒருசில கௌரவஸ்தர்கள்முயன்று ஸ்ரீ விசுவநாதர் ஆலயத்தில்(சிவாலயத்தில்)விவாகோற்சவம் நடத்தமுயன்றது விந்தையே. 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்'என்றபடி தங்கள் இஷ்டப்படி எதையும்செய்து சாதித்துக்கொள்ளும் தைரியம்படைத்த சிலர் இதில்கலந்திருப்பதால் தங்கள் கக்ஷியைப்பிரமாதமாகவாதிப்பார்கள். நிற்க இது சாஸ்திரப்படி சரியான விவாகமாகுமானால் இதனால் ஏழைப்பிராமணகுடும்பங்களுக்கு சிலவு குறையும், விசுவநாதர் ஆலயத்துக்கும் வரும்படி உண்டு. வழிகாட்டும் சிலருக்கும் நல்லலாபம் இல்லாமலில்லை. நல்லதானாலும் கெட்டதானாலும் முதன்முதலில் தைரியமாய்ச்செய்து மற்றவர் ஆச்சரியப்படும்படி

செய்யும் ஆற்றல் படைத்தது நமது நகரம்." அதில் விசேஷப்பெருமையையுடையது சோலையப்பமுதலியார்தெருவாகும். இத்தெருவிப்பிரசிரோஷ்டர்கள் இப்பொழுது புதுமுறையாக விவாஹம் நடத்த முயன்றிருக்கிறார்கள். ஆனால் இதனை மற்றவர்கள் ஒப்புக்கொள்ளுவார்களா? விவாகச்சடங்கு முனிசிபல் எலக்ஷன் மாதிரி வேடிக்கையானதல்லவென்பதை நினைப்பூட்டி சாஸ்திரமறிந்த பெரியோர்களின் சர்ச்சைக்கே விட்டுவிடுகிறோம் என ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

குறிப்பு:— சாஸ்திரமுறை தவறி செய்யப்படும் எந்தக்கார்யமும் சரியான கார்யமாகாது. அதில் விவாககார்யம் பிரதானமாயுள்ளது. அது சாஸ்திரப்படி அனுஷ்டிக்கப்பட்டாற்றான் ஸாதுவாகும். சாஸ்திரவிபரீதமாகச்செய்யின் அது சாஸ்திரீயமாகாது. இதன் விரிவு வேறிடத்தில் பிரசுரிக்கப்படும்.

ப—ர்—

# சாஸ்திரிநேரு ஸம்வாதமும் வைக்கத்து த்ரிமூர்த்திகளும்.

22—5—1930-ல் பிரசுரமான ஆர்யதர்மஸஞ்சிகையிலுள்ளதும் பிர்ம்மஸ்ரீ சுப்பிரமணியசாஸ்திரிகளவர்களால் எழுதப்பட்டதுமான 'சாஸ்திரிநேரு ஸம்வாதம்' என்ற தலையங்கத்தின்கீழ் காணப்படும் விஷயங்களைப்பற்றி யாரோ மூவர்கள் வைக்கத்திலிருந்து பிர்ம்மஸ்ரீ சாஸ்திரிகள் அவர்களின்பேரிலும் நம் பத்திராதிபர்பேரிலும் வெகு கோபங்கொண்டு எழுதிய ஒரு லிகிதமும் அதற்கு சாஸ்திரிகள் அவர்கள் எழுதிய சமாதானமும் 3–7–30ல் வெளியான ஸஞ்சிகையில் காணப்படுகின்றன.

அந்தோ! நம் பிராமணச் சிறுவர்களுள் மூளையை மேல்நாட்டுப் படிப்பும் மேல்நாட்டு நாகரீகமும் இவ்விதம் குலைத்துவிட்டதைப்பற்றி மிகவும் பரிதாபப்படக்கூடியதாயிருக்கிறது. ஆங்கிலப் படிப்புப் பெற்றவர்கள்தான் 'படித்தவர்கள்' (educated men) அவர்கள்தான் மரியாதைக்குப் பாத்திரர்கள் என்றும் ஸம்ஸ்கிருதபாஷையையும் அந்ததேவபாஷையிலுள்ள சாஸ்திரங்களையும் கற்றஷை சாஸ்திரிகள் அவர்கள்போன்ற பெரிய வித்வான்கள் 'படிப்

பற்றவர்' (uneducated men) என்றும் நினைத்து மரியாதையில்லாமல் 'திராவிடசாஸ்திரி, M. N. சாஸ்திரி' என்று ஏகதேசமாய் மேற்படி மூவர்கள் எழுதியிருப்பதற்கு இந்தப்பத்திரிகை துவாராவாகவே மன்னிப்புக் கேட்டுக்கொள்வார்களென நம்புகிறேன்.

இச்சமயத்தில் ஸ்ரீஜத் பண்டிதநேரு முதலியோர்கள் நம் உயிரைக்காட்டிலும் பெரிதான ஸநாதனதர்மங்களுக்கும் நம்மதத்திற்கும் செய்திருக்கும் அனர்த்தத்தைப்பற்றி எழுதவேண்டாம் என்று என் மனது அபிப்பிராயங்கொண்டாலும் வைக்கத்து பிராம்மணர்கள் அவமரியாதையாய் மேலே கண்டபடி எழுதியிருப்பதைப் பார்த்தபிறகு சும்மாவிருக்க மனமிடங்கொடுக்கவில்லை. பண்டிதநேரு அவர்கள் எப்படி தேசசேவையில் ஈடுபட்டிருக்கிறாரோ அப்படியே ஷை வித்வான்களும் நம் ஆர்யதர்ம சேவையில் ஏற்பட்டிருக்கிறார்கள் என்பதும் பண்டிதநேரு அவர்கள் டில்லி சட்டஸபையில் நம் சாஸ்திரங்களை குப்பையென்று சொல்லி ஸநாதனஹிந்துக்களின் மனதைப் புண்படுத்தியிருப்பதும் நம் வைக்கத்து ஸ்நேகிதர்களின் மனதுக்கு ஏன் வரவில்லையோ? ஸ்ரீஜத் நேரு அவர்களிடமும் அவரைப்போல் தேசசேவை செய்கிறவர்களிடமும் யாருக்கும் அந்தமட்டில் த்வேஷமில்லை. அந்த விஷயத்தில் அவர்கள் சிலாகிக்கத்தக்கவர்கள்தான். ஆனால் அவர்களை எந்த விஷயத்திலும் குருவாக வைத்துக்கொண்டு அவர்கள் செய்யும் காரியங்களெல்லாம் நல்லதென்று நாம் அவர்களைப் பின்பற்றுவோமாகில் பெரும் முட்டாள்தனமாயும் ஆபத்தாயும் முடியுமன்றோ? அவர்கள் மனதுக்குப்புலப்படாத விஷயங்களில் தன் சுயபுத்தியைக்கொண்டு மனம்போனபடி பேசுவது பிசகேயாகும். ஒருவர் பெரியடாக்டராயிருக்கலாம், அவர் பாலங் கட்ட யோசனைகள் சொல்லத்தகுமா? அல்லது ஒரு இஞ்சினீயர் வியாதிகிரஸ்தனுக்கு சிகித்ஸை செய்ய முயலலாமா? நம் தர்மானுஷ்டானங்கள்சம்பந்தமான விஷயங்களில் ஸ்ரீஜத் நேரு முதலியோர் போகும் வழி தப்பென்றும் அவைகளைப்பற்றிப்பேச அவர்கள் அனர்ஹர்களென்றும்தான் ஸநாதனதர்மிகளின் அபிப்ராயம்.

மேற்படி ஸம்வாதத்தை 'கட்டுரை' என்றும் பிராம்மணஜனங்களெல்லாம் ரொம்பவும்துக்கிக்கின்றார்கள் என்றும் எப்படி மூவர்களும் கண்டுகொண்டார்கள். ஷை மூவருக்குள் பிராம்மணசமூகம் அடங்கிவிட்டதா? பிர்ம்மஸ்ரீ சாஸ்திரிகள் அவர்கள் பிராம்

மணமஹாஸம்மேளனப்பத்திரிகையிலிருந்து எடுத்தெழுதியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் அது அவர்களின் கற்பனையல்லவென்றும் மூலப்பத்திரிகையிலுள்ளது வாஸ்தவமாவென்றும் ஷை மூவர்களும் முதலில் கவனித்திருக்கவேண்டும். அதைவிட்டு உருட்டலும் மிரட்டலுமாக வார்த்தைகளைக்கொட்டி எழுதியிருப்பது மிகவும் தகாததான காரியம்.

'அள்ளாமல் குறையாது, இல்லாமல் பிறக்காது' என்று ஒரு வசனமுண்டு. சென்னையில் பிர்மஸ்ரீ U. P. கிருஷ்ணமாசார்யார் அவர்கள் பிரசுரம் செய்துவரும் 'சநாதனிஸ்டு' (Sanatanist) பத்திரிகையில் 13—2—30-ல் பிரசுரமான சஞ்சிகையின் 140-வது பக்கத்திலும், 19—2—30-ல் பிரசுரமான சஞ்சிகையின் 60, 55-வது பக்கங்களிலும் 'Dharma Veera Dal in the Congress Camp, Lahore—Congress staggered' என்ற தலையங்கத்தின் கீழ் இந்த சாஸ்திரிநேரு ஸம்வாதமே இருப்பதைப் பார்த்தும் அதற்கு இதுவரையில் மறுப்புரை கிடையாதென்பதைத்தெரிந்துகொண்டும் ஷை மூவர்களும் அவர்களின் சிநேகிதர்களும் சமாதானமடைவார்களாக.

G. V. லக்ஷ்மணசாஸ்திரிகள், B.A., L.T., B.L.,
அட்வோகேட் & தஞ்சைஜில்லா பிராம்மணர்
ஸநாதனதர்மஸம்ரக்ஷணஸபை காரியதரிசி.

---

# நான் வரவேற்கின்றேன்.

நம் பத்திரிகை இதழ் 25-ல் சிராத்தத்தில் சிலாது ஆசங்கை என்ற தலையங்கத்துடன் பம்பாய் சுந்தரசர்மா என்பவர் எழுதிய வியாஸத்தை நான் வரவேற்கின்றேன். இதழ் 27-ல் அவ்விஷயத்தை சர்மா முடித்துவிட்டார். அதில் கேட்டிருக்கும் விஷயங்களுக்குப் பதிலுக்கும் பிர்மஸ்ரீ ஜகதீசசாஸ்திரிகள் முன் நிற்கிறார்கள். ஆனதுபற்றி " मत्कुणहननेमहामहीध्र ग्रहणमिव " மூட்டுப்பூச்சியை நசுக்க மலையைப்பிடுங்கினதுபோல் என்றபடி நானும் வரவில்லை, ஆயினும் நம்பத்திராதிபர் இவ்விஷயத்திற்கு பதில்கூறுவது நம்ஆர்யதர்ம பத்திரிகாபிமானிகளுக்கு அவசியமேயில்லையாயினும் என்று அஸம்மதமாய்க் கூறுவது என் மனதுக்கு அவ்வ

ளவுக்கு ஒத்ததாகவில்லை என்பதை வெளியிடவே நான் வரவேற்கின்றேன் என்று மும்முறைக் கூறுகின்றேன். இதன் காரணம் இது. சர்மா சொல்லும் விஷயம் ஆர்யஸமாஜத்தாரது தாண்டவம். அவர்கள் சிராத்தம் அவசியமில்லையென்று விட்டனர். புராணம் ஸ்மிருதிகள் விரோதமுள்ளவைகளாய் இருப்பதால் ஒரு போதும் அவைகளை ஏற்கிறதில்லை. வேதத்தில் பலவிடங்களில் பொருத்தமற்ற வாக்கியங்களிருப்பதால் அவைகள் ஏற்கத்தக்கதல்ல. மந்திரபாகங்களிலும் பல பாகங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றனவென்று அவர்கள் மனதிற்கிசைந்த சிற்சில வாக்கியங்களைப் பிரமாணமாய் ஏற்கின்றனர். அவ்விஷயம் சர்மாவின்முகத்தில் நர்த்தனத்திற்குவந்து நம்பத்திரிகையில்தாவிக்குதித்தது. இவ் விஷயங்களிதுகாறும் தமிழில் வந்ததாய் நான் அறியவில்லை. இது விஸ்தாரமாய் ஆங்கிலத்தில் இருக்கிறது. அவ்விதமிருப்பதால் மதவாஸனையைத் துலைத்து ஆங்கில வாஸனை மண்டை கொண்டவர்களும் ஒன்றுமறியாதவர்களும் அவர்கள் உபதேசவலையிலகப்பட்டு வடதேசங்களில் அது பாவியது. இது தமிழில் வந்ததில் வேறு பத்திரிகையில் ஏறியிருந்தால் எல்லோரும் சந்தோஷித்து கெடாதவர்களுக்கும் கெட்டுப்போக வழியேற்படும். அவ்விதமல்லாது பயந்து ஓடின திருடன் தலையாரிவீட்டில் ஒளிந்தது போல் நம் பத்திரிகையில் விழுந்தத்தைப்பற்றி சர்மாவுக்கும்நன்றி பாராட்டுகிறேன். விஷயத்தையும் வரவேற்கிறேன். இதற்கு சரியான மருந்து நம் சாஸ்திரிகள் சாற்றிவிடுவார்களாயினும் இரண்டொரு விஷயம் மட்டிலும் குறித்துவிட்டு சாஸ்திரிகள் வரும் வழியை தாராளமாய் திறந்துவிடுகின்றேன்.

பத்திராதிபர்களே! தாங்களும் பத்திரிகையில் பிர்மஸ்ரீசாஸ்திரிகளவர்கட்குப்பொருமையோடு நன்கு அவகாசமளிக்கவேண்டுகின்றேன்.

இங்கு சர்மா இவ்விஷயத்தை தன் அபிப்பிராயமாய்ச் சில இடங்களிலும் இறுதியில் சிலரது ஆசங்கை இவ்விதமிருக்கிறது. தயவு செய்து பதிலளிக்க வேண்டுகிறேன் என்றும் முடித்திருக்கிறார்.

சர்மாவினிடம் இதைக் கூறுகின்றேன்.

எனக்கு ராஜநீதி என்றசட்டத்தில் பிரியமில்லை. அதுபரஸ்பர விரோதமாயிருக்கிறது. இதை புத்திமான் ஏற்கவேமாட்டான்.ஒரி

டத்தில் ஒரே குற்றத்திற்குவிட்டுவிடலாமென்றிருக்கிறது. அதே குற்றத்திற்6-மாததண்டனைஎன்கிறது. மற்றேரிடத்தில்அதற்கு1 ஞூம்முதல்7-ஞூம்என்கிறது. ரயில்வண்டியை நிறுத்த சங்கிலியைஇழுஎன்றுபோட்டிருக்கிறது. அடுத்தவரியில்இழுத்தால் 50ரூ. அபராதம்என்றிருக்கிறது. ஓரிடத்தில்கட்குடிப்பதுமகாபாபம்என்றிருக்கிறது. மற்றேரிடத்தில் “**नमांसभक्षण दोषोनमद्ये**” என்கிறது. ஓரிடத்தில் 2-வயதுக்குட்பட்ட குழந்தையை இறந்தால் புதைக்கவேண்டும் என்கிறது. மற்றேரிடத்தில் அத்தகைய குழந்தையை எறிக்கவேண்டும் என்கிறது. இவ்விதம் வைதிகத்திலும் லௌகிகத்திலும் ஏராளமாய் தோஷம் காணப்படுகின்றனவாதலால் நான் லௌகிகத்தையும் நம்பவில்லை, வைதிகத்தையும் நம்பவில்லை என்று சொல்வது அழகல்ல. அததன் சந்தர்ப்பத்தைப் பார்த்துத் தான் கருத்தறியவேண்டும் என்பது புத்திசாலிகளின் கொள்கை. இவ்விதம் பலவகையில் சர்மாவின் வசனத்திலிருக்கும் முன் பின் விரோதம் பல. இதை சாஸ்திரிகளவர் விளக்குவார்களென்று நிறுத்திக்கொள்கிறேன். சுபம் !

M. N. சுப்பிரமணிய சாஸ்திரி.

---

# பக்தியின் பெருமை.

எங்குமுளன் கண்ணனென்ற மகனைக்காய்ந்து
இங்கில்லையா வென் றிரணியன் தூண் புடைப்ப
அங்கப்பொழுதே அவன் வீயத்தோன்றிய வென்
சிங்கப்பிரான் பெருமை யாராயும் சீர்மைத்தே.

ஸ்ரீய:பதியின் திருவருளை முன்னிட்டு நாடுபுகழும் நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய இப்பாசுரத்தின் பெருமைக்கடலில் குதித்துக் குடைந்து குளிர்ச்சிபெறக் கொஞ்சம் நீராடுவோம். எங்கும் உளள் கண்ணன். இதில் சந்தேகம் என்ன? கண்ணில்லாதவன் கிணத்துத்தவளைக்கொப்பாவான். ஒன்றையும் பார்க்க வகையில்லாமல்‘அருண்டவன் கண்ணுக்கிருண்டதெல்லாம் பேய்’ என்றபடி உண்மை புரியாது வீணில் காலம் கழிப்பான். செவி

முதலான மற்ற இந்திரியங்கள் வஸ்துக்களைக் கூட்டிக் கண்முன் நிறுத்தும். எஜமானனான கண் அவற்றைச் சீர்தூக்கிப் பார்த்து வேண்டுவன கொண்டு வேண்டாதென விலக்கும். ஓரிடத்தே நின்றாலும் இடமிடமாய்ச் சென்றாலும் மனிதனது வாழ்வை மகிமைப்படுத்துவது நயனமே. இந்நயனம் எவ்வளவுக்கெவ்வளவு பரிசுத்தமாயும் குற்றம்குறையின்றியும் இருக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு ஞானத்தின் உயர்வு காணப்படும். பார்வைக்கு ரமணீயமாயும் இந்நேத்திரம் இருத்தல் வேண்டும். கோணலான பார்வையுள்ளவனிடம் ஒன்றும் அணுகாது. ஆகவே அவனது ஞானமும் பார்க்கும் பதார்த்தங்கள் ஒதுங்கிப்போவதால் குன்றிப் போம். வெளியில் விஷயங்களைப் பார்த்தல்மாத்திரம் போதாது. மனதுடன் கலந்து உள்ளும் புறமும் சரிவரப் பார்க்கும் வல்லமையும் கண்ணுக்கு இன்றியமையாததாகின்றது. பூத பவிஷ்யத் வர்த்தமானங்கள் என்ற யாவையும் பார்ப்பதற்கு நம் கண்ணிற்கு பலமான பழக்கம் வேண்டும். இந்த ஸாமர்த்யமெல்லாம் நிறைந்த கண்ணைப் பெற்றவனைத்தான் கண்ணனென்று பூராவாக நாம் சொல்லலாம். இத்தகைய கண்ணனே எங்குமுளனாகப் பிரகாசிப்பான். அவனையே எந்த தேசத்திலும் எந்த காலத்திலும் எவ்வகையிலும் உளனென்று உலகம் மதிக்கும். இக்கண்ணனாதல் ஏனையோர்க்கும் கூடுமோ? "அமரமனத்துள்யோகு புணர்ந்த வனோடொன்றாகும்" யோகிகளுக்குக்கூடக் கண்கள் இச்சிறப்புப் பெற்றனவாதல் அரிது. இதனால்தான் நமதாழ்வார் "கண்ணன் கண்ணன்றி யில்லையோர் கண்ணே" என்று பகவானுடைய கண்ணினைப் புகழ்கின்றார். "கண்ணன் கண்" என்பதற்குக் கண்ணனிடத்து என்று பொருள் கொண்டால்

> यश्च रामं न पश्येत्तु यं च रामो न पश्यति ।
> निन्दितः स भवेल्लोके स्वात्माप्येनं विगर्हते ॥

என்றபடி பகவத் ஸந்தர்சனம் கிடைக்கப்பெறாத கண்ணே கண்ணல்லவென்றாகும். ஆதி மத்யாந்தரஹிதனாய் உளன் என்ற வார்த்தைக்கு என்றும் உரித்தானவனாய், 'எங்கும் உளன்' என்று சொல்லும்படி ஸர்வதேச ஸர்வகாலங்களிலும் பூர்ணமாய் நிற்பவனாய், "எங்கும் கண்ணன்" என்றபடி "सहस्राक्षः सहस्रपात्" என்ற விச்வரூபங்கொண்டு "புல்லெறும்பாதி சராசரம் முற்றவும்

கடாக்ஷிக்கும் ஸ்ரீநிவாஸனே கண்ணன். இக்கண்ணனைப்பார்க்கு மவர்களே பாக்யசாலிகள் என்று விஸ்மயப்படுகிறார் ஆழ்வார். பக்தசிகாமணியான ப்ரஹ்லாதர் பிதாவினிடம் "எங்குமுளன் கண்ணன்" என்று சத்தியமே சொன்னார். உலகத்தில் நிஜத்தை யார் லக்ஷ்யம் செய்கிறார்கள்? பொய்யே சொல்லிப் புறமேயாடுவ தன்றோ உலகவியற்கை? நிஜமான பழங்களை அசட்டைசெய்து விட்டுக் கையும் பொய்யுமான பண்ருட்டி மண்பழங்களை ஏராள மான பணம் கொடுத்து வாங்குவதுபோல் ஹிதமான நிஜத்தை விட்டு அனர்த்தகரமான அசத்தியத்தையே உலகம் கொண்டாடு கிறது. குடிலனான இரணியனுக்கு "எங்குமுளன் கண்ணன்" என்பதன் உண்மை புலப்படுமா? "அப்பா! இல்லையென்று கண் ணுள்ளவர்கள் ஒன்றையும் சொல்லமாட்டார்கள். ஆஸ்தி என்று விசுவாசத்துடன் நீர் ஒன்றையும் பார்ப்பதில்லை. பார்த்தால் நித்ய மாய் நிலைத்திருக்கும் நாதனை இல்லையென்று சாதிப்பீரோ? எவ் வஸ்துக்களிலும் உள்ளும் புறமும் நின்று அவற்றுக்குக் கண்ணாய் ஆகி அவற்றைப் பிரகாசிப்பிக்கும் பரம்பொருளை உமக்கு ஏன் பார்க்கமுடியவில்லையோ, "எங்குமுள்ள கண்ணன்" என்று நான் "பரந்ததண் பரவை தன்நீர்தொறும் பரந்துளன்" என்றபடி நிறைந்த பரமாத்மாவைச் சொல்ல அவனைப்பாராமல் குருடன் போல் பரிமிதமான எதையோ இங்குமங்கும் பிரமைகொண்டு தேடுகின்றீரே? இது என்ன புத்திக்குறைவு! அணுவுக்கணுவாய் பெரிதினும் பெரிதாய் விளங்கும் அவனை உமக்கு அகண்டமாய்ப் பார்க்கமுடியாவிட்டால் ஏதாவதுஒரு கண்ணுக்கெதிரான வஸ்து வாய் அவனை நினைத்து ஒருமனதாய் அதனைச் சிறிது உற்றுப் பாருமே. அப்படிப்பார்த்தால் எங்குமுள்ள சூரியன் பார்ப்பவன் எங்கு நின்றாலும் அவன் கண்ணுக்கெதிராய்த்தென்படுவதுபோல் உமது கண்ணின் வழியில் அவன் வருவான். பக்தனான என் னிடத்தில்போல் தம்மிடமும் எங்குமுளனான கண்ணன்கடாக்ஷங் கள் சேரும். 'இதுவே தமது தலைமுறைதலைமுறைக்கும் போதும்' என்று ப்ரஹ்லாதன் பயநயமாய்ச் சொன்னான். இம்மிக ஞானச் சிறு குழவியைக் கைகளாலாரத்தழுவிக் கண்களாலாரப்பருகி அங் கங்களாலாரவணைந்து மகிழாமல் பிதாவான இரணியன் இவனைக் காய்ந்தான். இல்லையென்று நாஸ்திகவாதம் புரிந்து கண்டபடி திரியும் துஷ்டப்பிள்ளைகளைக் காய்வாரைக் கண்டதுண்டு. ஆஸ்திக

சிகாமணியாய் ஸகல சாஸ்திரார்த்தங்களும் அறிந்து அழகாய் நிஜமே பேசும் செல்வனைக் காய்வதும் உண்டோ? அப்படியே பிடிக்காத விஷயத்தைச்சொன்னால்தான் என்ன? பிறனானால் காய்வதுண்டு. பெற்ற மனம் பித்தென்றபடி மகனென்று பார்க்க வேண்டாமோ' பதினாயிரம் துர்க்குணங்களிருந்தாலும் பிதாவுக்கு பிள்ளையினிடம் வாஞ்சை விடுவதில்லையே என்ன விபரீதமிது? மகனைக் காய்ந்தான். அவன் சொன்னது வாஸ்தவமோ என்பதை ஆராய்ந்தானில்லை. தீராக்கோபம் கொண்டவனாய்த் தனயனை பலவிதமும் இம்சித்தான். கயலில் முழுக்காட்டினான். தணலில் தள்ளினான். மலையில் மோதினான். மாசுணங்களைக் கடிக்கவிட்டான். நஞ்சையும் ஊட்டுவித்தான். ஒன்றும் பயன்படவில்லை. ' अच्छेद्योऽयमदाह्योऽयमक्लेद्योऽशोष्य एव च ' என்ற வேதவாக்யங்களின் உண்மை உள்ளங்கை நெல்லிக்கனியாய் வ்யாக்யாதமாச்சுது. கோபத்தைத் தணித்துக்கொண்டான். லோப மோகங்கள் விலகின. குமாரன் சொல்வதைப் பரிக்ஷிக்க எண்ணங்கொண்டான். தான் கோபத்தைத் தணித்துக்கொண்டதை தநயனுக்குக் காட்ட இஷ்டமில்லை. சிறிது லஜ்ஜைகொண்டான். பிள்ளைக்கு இடம் கொடுத்ததாய்விடும் என்றும் எண்ணினான், இது காரணங்கொண்டு சுதனைப்பாராமல் எதிரில் நின்ற ஒரு தூணை நோக்கினான். ஸ்தூலபுத்தியான நமக்கும் இந்தத் தூணுக்கும் தான் சேர்த்தி என்று பார்த்தானெனக் கூடுமா ? ப்ரஹ்லாதன் பார்த்தார். இதுவே நல்ல சமயமென்று ஊகித்தார். ஸ்தூலத்திலிருந்து வரும் ஸூக்ஷ்ம ஞானமே திடமானது. இத்தூணிற் கந்தர்யாமியான எனதீசன் இத்தூணையே ஆசார்யஸ்தானத்தில் வைத்து எனது பிதாவுக்கு அருள் தரட்டும் என்று வேண்டினார். நாம் நேரில் பிதாவுக்கு உபதேசிப்பதற்கு அதிகாரியல்லவாதலால் இத்தூணைப்பார்த்துச் சொல்வோம் என்று நிச்சயித்தார். ப்ரஹ்ம வித்யையைக் கேளாமல் சொல்லக் கூடாது என்ற சாஸ்திரத்திற்குப் பயந்து கொஞ்சம் தயங்கினார். 'सत्यं विधातु निजभृत्यभाषितं' என்று தத்க்ஷணமே தூணில் நின்ற 'பகவானது ஸங்கல்பத்தால் ,,இங்கில்லையா'' என்று " तद्विद्धि प्रणिपातेन परिप्रश्नेन सेवया " என்றபடி இரணியன் ப்ரச்னம் செய்யலானான். "दृश्यते" பாருங்கள் அதோ காணப்படுகின்றார்'' என்று ப்ரஹ்லாதன் சொல்வ

தற்கு சமகாலத்திலேயே " क्रिया केवलमुत्तरं " என்பதற்கிணங்கத் தூணினின்று பகவான் " स्तम्भैकवर्जमधुनापि करीश नूनं त्रैलोक्य-मेतदखिलं नरसिंहगर्भम् " என்றபடி நரசிம்ம ரூபியாய் ஆவிர்பவித்தார். தூணில் இருக்கிறார் என்று நம்பியிருப்பவர் காணப்படாமல் தாமதிக்கின்றார் என்று தூணை இரண்யன் புடைத்தான். என்ன ஆச்சர்யம்! நீ இல்லை என்றதை நிஜமாக்க இதுவரையில் தூணில் மறைந்திருந்தேன். உன் மகன் உண்டென்று சாதித்ததைச் சத்தியமாக்க இதோ ஸ்வரூபடத்துடன் வந்தேன். மிருக புத்தியாய் இல்லையென்றாய். மனுஷ்ய புத்தியோடு உன் மகன் உண்டு என்றான். இருபாவனைக்கும் நான் உட்பட்டவனென்று காட்ட " न मृगं न मानुषं " என்றபடி இந்த விசித்திரரூபங் கொண்டேன் என்று நாதன் மவுன வியாக்கியானம் செய்துகாட்டினார். பகவானைப்பார்த்தவுடன் அங்கப்பொழுதே அவன்வியத் தோன்றினான் இரண்யன். அவன் என்ற அகங்காரம் அவனை விட்டுப் பஞ்சாய்ப் பறந்தது. ஈசன் பார்க்கப்பட்டானாகில் அப்பொழுது மோஹமேது, சோகமேது என்றபடி ஈசனுடனொன்றான். இவனது கோபத்தை ஏகதேசமாய் விலக்கு வாங்கினவர் போல் ரௌத்ராகாரமாய் பகவான் வெகுகாலம் வீற்றிருந்தார். கண்ணெடுத்துப் பார்க்க முடியாத காந்தியுடன் விளங்கியநாதனை இமைகொட்டாது ஆனந்தமாய் அமிருதவர்த்தியைப் பார்ப்பதுபோல் பிரஹ்லாதனொருவனே அச்சமயம் ஏகாந்தமாய் சேவித்தான். நடுநடுக்கங்கொண்டு தூர நின்ற மஹேச்வராதி லோகநாதர்களும் மஹாலக்ஷ்மி முதலான லோகமாதாக்களும் அவனது சிபார்சு பெற்றதால் जगद्रक्षकனுவதை விட்டு जगद्रक्षकனுகை மறுபடி பகவானைப்பார்க்கும் பெரும் பாக்யத்தைச் சுலபமாய் அடைந்தார்கள். ஸ்ரீ மஹாலக்ஷ்மியும், குழந்தை பிரஹ்லாதனை மடியில் எடுத்துக்கொண்டு மாதவன் மார்பை முன்போல் அலங்கரித்தாள். இந்த ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ மூர்த்தியின் பரிபூர்ண கடாக்ஷங்கள் நித்யோத்ஸவங்களையும், நித்யகல்யாணங்களையும் நம்மீது வர்ஷிக்கட்டும்.

கல்யாணராமசாஸ்திரியார்.

---

# வயோநிர்ணயம்.

(முன் தொடர்ச்சி)

ஆகவே சிறுகுழந்தையினிடமே பிரயோகிக்கப்படும் யுவனுக நீ ஆகவேண்டுமென்ற லௌகிகவசனம்போல் "ஸௌகத்தையளிக்குந்தன்மை கணவனுடைய சரீரஸம்பந்தம், கிழத்தனம், ஸ்நேகம், ஐசுவரியம், எஜமானியாயிருப்பது, புத்திரர்களின் பிரஸவம், அக்னிக்குப் பணிவிடை" முதலிய காரியங்களுக்கு யோக்யதையை பிரார்த்தனை செய்துகொள்வதாக போதனஞ்செய்யும் விவாஹமந்திரவசனங்களுக்கும் அத்தகைய காரியங்களைச் செய்வதற்குச் சிறிதும் யோக்யமில்லாத வயதுவாய்ந்த சிறு பெண்களிடம் பிரயோகம் பண்ணுவதால் பிரயோஜனமுண்டேயன்றி காமவெறிகொண்டு இங்குமங்குந்திரியும் தருணியினிடம் பிரயோகஞ்செய்வதாலல்லவாதலால் தங்களுக்கு இஷ்டமாய் உள்ள லிங்கங்களுக்கு பிரயோஜனமில்லை. அன்றியும் எங்களாலெடுத்துக்காட்ட மந்திர லிங்கங்களே உங்கள் மனோரதத்துக்கு முற்றிலும் விரோதமாக பிரௌடாவிவாஹத்தை நிஷேதிப்பதற்குத் தான் ஸாதகங்களாக விருப்பதால் பாலிகாவிவாஹந்தான் சாஸ்திரீயமென்பதற்கிந்த லிங்கங்களே, போதுமான பிரமாணமாக ஸித்தித்துவிடுகின்றது. வைதிகர்களுக்கு சிறு பெண் விவாஹந்தான் சாஸ்திரீயமென்பதற்கு வேறு பிரமாணந்தேடவேண்டியதில்லை.

சங்கை:— சிறு கன்யகையினிடத்தில் இவ்விவாஹமந்திரங்களை உச்சரிக்கும்பக்ஷத்தில் அந்தஸமயத்தில் இப்மந்திரங்களுக்கு அர்த்தமில்லாததால் அம்மந்திரங்களனைத்தும்பிராணனில்லாதவைகளாக செத்துவிடும் என்று சங்கிப்பது தவறேயாகும். சிறு பெண்களிடத்தில் அவ்விவாஹமந்திரங்களைக்கொண்டு பாவியான அநேகப் பிரயோஜனங்களைப் பிரார்த்தித்துக்கொண்டால்தான் அம்மந்திரங்கள் சாகாமல் அமிருதங்களாகுமென்று நிரூபித்துள்ளோம். நீங்கள்தான் ருதுமதிகளிடத்தில் அவைகளைப் பிரயோகித்துக்கொண்டு கொல்வதற்குப்பிரயத்னப்படுகிறீர்கள். ருதுமதிகளிடத்தில் அம்மந்திரங்களைப் பிரயோகஞ்செய்தால் செய்த காரியத்தையே மறுபடியும் திருப்பிச்செய்வதற்கு ஸமமாமென்றும் அவர்களிடத்தில் அம்மந்திரார்த்தம்முந்தியே ஸித்தமாயிருப்பதால்

நிஷ்பிரயோஜனமாய் முடியுமென்றும் நன்கு நிரூபித்துவிட்டோமன்றோ?

மற்றொரு சங்கை:— "வெகுகாலத்துக்குப்பிறகு ஸம்பவிக்கப்போகின்ற காரியங்களைக்குறித்து இவ்விவாஹமந்திரங்கள் பிரயோகஞ் செய்யப்படுவதாகவும் வைதிகர்கள் ஸ்தாபித்துவிடுவார்கள்" என்று ஏளனம் பண்ணுகிறார்கள்.

இப்படி ஏளனம் பண்ணுவது தகுதியில்லை. நாம் நம்மைப் படைத்த பிரும்மதேவர்முதற்கொண்டு வைதிகர்களேயாம். வைதிகர்களால்தான் வேதார்த்தமறியக்கூடுமேயன்றி அவைதிகர்களாலறியமுடியாது. லட், லுட், என்ற பிரத்தியபதபதார்த்தங்களை பிரித்தறியும் சக்தியற்ற அவைதிகர்கள் வேதார்த்தங்கூற பிரவிருத்திக்கும்பக்ஷத்தில் இப்படிப்பட்ட ஆபத்துக்கள் அடிக்கடி உண்டாகுமென்பது நிச்சயம். இப்படி ஆபத்து உண்டாகுமென்பது நிச்சயமென்பதற்கு விவாஹமுறையையாக்ஷேபிக்கும் இப்பூர்வபக்ஷியே சாக்ஷியாம்.

இதுகாறும் பிரதானமந்திரலிங்கங்களைத்தவிர மற்றவைகளுக்கு ஸமாதானங் கூறப்பட்டது.

ஆகையால் லோட் லேட் லிங்முதலிய விகுதியுள்ள பதங்களை ரஹஸ்யமாகவும் பாவகர்பமாகவும் பிரயோகம் பண்ணிவரும் விவாஹமந்திரங்களே தங்களைப்போன்ற தற்காலத்தியவர்களின் விவாஹத்திலுள்ள துராக்கிரஹத்தை வேருடன் அறுத்துவிடுகின்றனவென்பதுமல்லாமல் அதே விவாஹமந்திரங்களால் விவாஹப்பெண்ணிற்கு எதிர்பார்க்கப்படும் பிரார்த்தனையாலும் விவாஹப்பெண்ணை கன்யகையாகவே தெரிவித்து மற்றுமுள்ள ஸ்மிருதிகளையுமனுக்ரஹிக்கின்றன என்று ஸித்தம். இதையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டுதான் ஸர்வக்ஞராகிய மனு பாணிக்ரஹணமந்திரங்கள் சிறு பெண்களிடத்தில்தான் பிரதிஷ்டையையடையும்" என்று பகன்றார்.

கன்யை என்ற பதத்திற்கும் விவாஹமாகாத பெண் என்று தானர்த்தமென்பது மனுவுக்கும் ஸம்மதமென்பதை மேலே நிரூபிக்கப் போகின்றோம்.

இதனாலேயே மற்றொருதர்க்ககுசலனால் மந்திரலிங்கமூலமாக ஸ்தாபிக்கப்பட்டபுஷ்பவதீவிவாஹம்சாஸ்த்ரீயமல்லவென்று ஸித்தி

த்துவிட்டது. புதல்வன் அவனுடைய ஆயுள் முதலிய பிரார்த்தனு வஸ்துக்களெல்லாம் விவாஹத்தில் பிரார்த்திக்கப்படுகின்றனவே யன்றி ஸித்தாந்தங்களல்லவாதலால் எப்படி புத்திரவதீவிவாஹம் சாஸ்திரீயமென்று ஸித்திக்கும். கணக்கற்ற ஐசுவர்யம் சக்தி இவை நிரம்பிய தேவர்களிடம் ஐசுவர்யகாமுகர்களாகிய நாம் அனேகப் பிரயோஜனங்களை விவாஹகாலத்தில் பிரார்த்தித்துக் கொள்ளுங்காலத்தில் இவ்வளவுதான் பிரார்த்தித்துக்கொள்ள வேண்டும். இதற்குமேல் கூடாதென்று நியமம் பண்ண காரணம் யாதொன்றுமில்லை. ஆகையால் வீட்டுவேலையைச் செய்யும் ஸாமர்த்தியம், போக யோக்யதை முதலிய காலாந்தரத்தில் ஸம்ப விக்கக்கூடிய பிரயோஜனங்களை வரன் எப்படி விவாஹகாலத்தி லேயே பிரார்த்தித்துக்கொள்கிருனே? அதேமாதிரி ஸந்தானுதி ஸம்பத்தையும் காலாந்தரத்தில் ஸம்பவிக்கட்டுமென்ற எண்ணத் துடன் வரன் பிரார்த்தித்துக்கொள்கிருனென்றுதான் சொல்ல வேண்டும். ஆகவே பிரார்த்தனுவஸ்துக்களெல்லாம் பிரார்த்திக்குங் காலத்தில் ஸித்தமாக இருக்கவேண்டுமென்ற மோஹத்தால் விவாஹமந்திரங்களுக்கு விபரீதார்த்தமுறைப்பது முறையல்ல. இப்படி அர்த்தாந்தரகல்பனமானது சாஸ்திரார்த்த நிர்ணயஞான மற்ற ஜனங்களுடைய மதிமயக்கமாத்திரமன்றோ?

விவாஹமந்திரங்களில் மாமனர் மாமியார் நாத்தனர் மச்சி னன் முதலிய பதிகுல பந்துக்களுக்கெல்லாம் விவாஹப்பெண் எஜ மானியாக இருக்கவேண்டுமென்று சொல்லியிருப்பதை அனு ஸரித்து இவர்களுக்குள் யாராவது ஒருவரில்லாவிட்டால் அம்மந் திரார்த்தம் அவளிடம பொருந்தவில்லையென்று விவாஹத்தையும் சாஸ்திரீயமில்லையென்று எவனுவது பிரமிப்பானே?

தவிர 'இனி ஸோமன் முதற்கணவன்' என்றர்த்தம் உள்ள மந்திரத்தின் லிங்கத்தை விமரிசம் செய்யத்தொடங்குவாம். இந்த லிங்கந்தான் இவர்களுக்குப் பிரதானமாயுள்ளது. ஸ்திரீகளுக்கு யோநிரோமம், ஸ்தனமண்டலம், ரஜஸ் இவையுண்டாகுங்காலத் தில் ஸோமன், கந்தர்வன், அக்னி என்ற மூன்றுபேர் கணவர்கள் என்று மந்திரங்களில் சொல்லியிருப்பது உண்மைதானென்றாலும் இம்மூன்று பேர்களுக்குள் எவருடைய ஆதிபத்யமிருக்கும்போது மந்திரங்களால் ஸ்திரீகளுக்கு விவாஹம் செய்விப்பது புலப்படுகின் றது என்னும் விஷயந்தான் நிர்ணயிக்கவேண்டும்.

(தொடரும்) வி. ஜகதீசுவரசாஸ்திரிகள்,